ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை–5.

முன்னிலை: திரு.த.ஆனந்த், இ.அ.ப.,

ந.க.எண். இ6/14734/2023 நாள்.17.07.2023.

பொருள்: பணியாளர் தொகுதி–ஆதிதிராவிடர் நலம் – காஞ்சிபுரம் மாவட்டம் – மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம் – இளநிலை உதவியாளர் – திருமதி.ச.சத்யாவதி என்பவரது பணிவரன் முறை செய்து ஆணையிடுதல் – சார்பு.

பார்வை:
1. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். ஜே1/5788/2021 நாள்.22.07.2021.
2. அரசாணை நிலை எண்.33 பணியாளர் நலம் மற்றும் திறன் மேம்பாட்டு (Q1) துறை நாள்.08.03.2023.
3. தொடர்புடைய ஆவணங்கள்.

******

ஆணை:–

காஞ்சிபுரம் மாவட்டம், காரை கிராமத்தை சேர்ந்த திரு.ச.அழகரசு என்பவர் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டு 12.04.2021 அன்று காலமானதால் வன்கொடுமை தடுப்பு சட்டம் திருத்த விதிகள் 2016–ன் கீழ் தனியரது மனைவி திருமதி. ச.சத்யாவதி என்பவருக்கு பார்வை 1ல் காணும் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் செயல்முறைகள் மூலம் ஆதிதிராவிடர் நல துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம், மௌலிவாக்கம், அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளியில் (தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில்) இளநிலை உதவியாளராக 28.07.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், பார்வை 2–ல் காணும் அரசாணையில் கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற பணியாளர்களின் பணியினை வரன்முறை செய்வது தொடர்பாக எந்த வித விதி தளர்வும் தேவையில்லை எனில் பணி நியமன அதிகாரியே சம்மந்தப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்து ஆணையிடலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நேர்வில் வன்கொடுமை தடுப்பு சட்டம் 2016–ன் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையில் பணிநியமனம் வழங்கப்பட்டு காஞ்சிபுரம் மாவட்டம், மௌலிவாக்கம், அரசு ஆதிந மேல்நிலைப்பள்ளியில் (தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகத்தில்) இளநிலை உதவியாளராக 28.07.2021 முற்பகல் முதல் பணிபுரிந்து வரும் திருமதி.ச.சத்யாவதி என்பவர் அப்பணிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 28.07.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. இவ்வாறு வரன்முறை செய்யப்படுவதால் திருமதி.ச.சத்யாவதி இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு பெற விதிகளின் படி தகுதியுடையவராகிறார்.

ஒம்./–த.ஆனந்த்
ஆதிதிராவிடர் நல இயக்குநர்.

ஆதிதிராவிடர் நல இயக்குநருக்காக.